தம்பலகமம் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 யூலை 08 மற்றும் 2020 யூலை 14 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் தம்பலகமம் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் மீள் செலுத்தப்பட்ட ரூபா 10,000 பெறுமதியான கேள்வி வைப்பு நிதிக்கூற்றின் இறுதி மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் கேள்வி வைப்பு பேரேட்டு மீதிக்கும் நிதிக்கூற்று மீதிக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. | செலுத்தப்பட்ட கேள்வி வைப்பைக் கழித்து மீதியை கணக்கில் கொண்டு வரப்பட வேண்டும். | 2019ம் ஆண்டு செலுத்தப்பட்ட ரூபா 10,000 பெறுமதியான கேள்வி வைப்பு தவறுதலாக இறுதி மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது 2020 ஆம் ஆண்டு நிதிக் கூற்று தயாரிக்கும் போது திருத்தப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதத்தில் பெறப்பட்ட ரூபா 119,083 தொகையான நீதிமன்ற தண்டப்பணத்தினை 1.53 வருமான தலைப்பின் கீழ் வைப்பதற்கு பதிலாக 5.23 என வைக்கப்பட்டுள்ளது. | உரிய வருமானத் தலைப்பின் கீழ் சாட்டுதல் செய்யப்பட வேண்டும். | இனி வரும் காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படுவது தவிர்த்துக் கொள்ளப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

(ஆ) பெறவேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லையில் காணப்பட்ட 4ஆம் வட்டாரத்தில் உள்ள இறைச்சி கடையின் குத்தகை நிலுவை ரூபா 153,299 கடந்த 3 வருடகாலமாக அறவீடு செய்யப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டு வருகின்றது. | குத்தகை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்ச்சியாக அறவிட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |

(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கான பதிவேடு பேணப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனம் தவிர்ந்த ஏனைய அனைத்து சொத்துக்களுக்கும் விலை மதிப்பீட்டுக்குழுவினை நியமித்து அவர்களின் ஊடாக மீள் விலை மதிப்பீடு செய்வதிலே தாமதம் ஏற்பட்டுள்ளது. |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய 9/2009 இலக்கம் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | விடுமுறை நாள் கொடுப்பனவு விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒரு உத்தியோகத்தருக்கு விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டில் ரூபா 65,104 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தது | சுற்று நிருபத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வருங்காலங்களில் செயலாளரின் விரல் அடையாளம் பதியப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா. 6,820,977 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 745,678 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2019.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வாடகை | 11,050 | 5,964 | 5,964 | 270 | 11,050 | 6,477 | 6,344 | 133 |
| அனுமதி பத்திர கட்டணம் | 2,053 | 940 | 930 | 10 | 1,463 | 913 | 905 | 8 |
| ஏனையவை | 15,350 | 12,049 | 11,268 | 781 | 4,500 | 3,601 | 3,058 | 543 |
| மொத்தம் | 28,453 | 18,953 | 18,162 | 1,061 | 17,013 | 10,991 | 10,307 | 684 |

2.2.2 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட குழு ஆதனவரி அறவிட உத்தேசித்துள்ள இடங்களைப் பார்வையிடப்பட்டுள்ளன மேலும் 2020ம் ஆண்டு முதல் காலாண்டில் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் துரதிஷ்டவசமாக கோவிட் 19 தாக்கம் ஏற்பட்டதால் இந்நடவடிக்கை இடையூராக அமைந்துள்ளது இது தொடர்பிலும் கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போதும் ஆலோசனை |

| | | |
|---|---|---|
| | | பெறப்படடுள்ளன. அதற்கமைய மட்டக்களப்பு விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எமது உத்தியேகத்தர்கள் இருவரை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

2.2.3 இறைச்சிக்கடை குத்தகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைக்குள் காணப்படும் இறைச்சிக்கடைகளின் குத்தகை வருமான நிலுவை மீளாய்வாண்டு வரை ரூபா 395,255 தொகையாக காணப்பட்ட போதிலும் இவ் நிலுவைத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2020 யூன் 02 ஆம் திகதிவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

2.2.4 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டுக்கான முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019ம் ஆண்டுக்கான முத்திரைக்கட்டணம் பெற்றுக்கொள்வதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | --------------------- | ---------------------------------------- |
| ஈ) உப விதிகள்<br>---------------------<br>1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 09 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்<br>-------------------------------------------------------<br>சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் பாலம்போட்ட ஆறு பிரதேசத்தின் காட்டுப்பகுதியில் வகைப்படுத்தப்படாது கொட்டப்பட்டு வருவதுடன் சபையினால் குப்பைகள் சேகரிப்பதற்கு பொருத்தமான இடம் ஒன்று உரிமையாக்கப்பட்டு திண்மக்கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ள இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுகளை கொட்டுவதற்கு பொருத்தமான இடத்தை அமைத்து திண்மக்கழிவு முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச சபையினால் தற்காலிகமாக குப்பைகள் கொட்டப்படும் பாலம் போட்டாறு சிங்ககந்தை பிரதேசத்தினை சபைக்கு பெற்றுக்கொள்வது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு தற்போது தொடர் நடவடிக்கையில் உள்ளது அவ்வாறு பெறப்பட்டதன் பிற்பாடு கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு மீள் பாவனை, உரப்பயன்பாடுகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டு PSDG நிதி ஒதுக்கிட்டில் இதற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>-------------------------------------------------------<br>2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடையப்படவேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பான எவ்வித முன்னேற்றத்தினையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பில் உத்யோகத்தர்கள் முறையாக பயிற்றுவித்து எதிர் வரும் காலங்களில் சிறப்பாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்@ர் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 11,800,224 கடன் தொகையை இன்று வரை கொடுத்துத் தீர்க்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடனைத்தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019ம் ஆண்டு உள்ளுர் அபிவிருத்தி நிதிய கடனில் 6 மாத தவனைப் பணம் மட்டுமே கட்டிச் செலுத்தப்பட்டதுடன் ஏனை தவனைகளை கட்டுவதற்கு சபையின் வருமானம் போதநிலை காணப்பட்டது என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (ஆ) | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 09 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் 2015 ஆம் ஆண்டு காணாமல் போயிருந்ததுடன் அதன் மூலம் பெறப்பட்ட பணம் பற்றுச்சீட்டுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் சபையில் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் தொடர்பான சீட்டை கையாள்பவர்கள் கண்காணிக்கப்பட வேண்டும். | இவை தொடர்பில் சபைக்குச்செலுத்த வேண்டிய தொகையை கணக்கிட்டு குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன் அப்போதைய செயலாளராக கடமையாற்றிய உத்தியோகத்தருக் கெதிராக முறையான ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ஒழுக்காற்றுக் கட்டளையும் வழங்கப்பட்டுள்ளது |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் | | |
| | 03 உதவியாளர்கள் மற்றும் 05 சிற்றூழியர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் உரிய நியமன அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) சபையிலிருந்து சேவையை விட்டு விலகிய ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 16,474 தொகையான கடன் நிலுவையை அவர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது |

3.4 சொத்து முகாமைத்துவம்

3.4.1 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் மோட்டார் சைக்கிள் இரண்டு சக்கர உழவு இயந்திரம்,நான்கு சக்கர உழவு இயந்திரம் ஆகியவற்றை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது 03 வருடம் தொடக்கம் 12 வருட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது. | இருப்பு கணிப்பீட்டு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019ம் ஆண்டுக்கான இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

3.4.2 வருடாந்த இருப்பு கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிகள் அத்தியாயம் XI இன் 203 ஆம் பிரிவுக் இணங்க வருடாந்த இருப்பு கணிப்பீட்டு சபை ஒன்றை சனவரி மாதம் முற்பகுதியில் நியமித்து நியமிப்புக் காலத்தில் இருந்து 01 மாதத்தினுள் வருடாந்த இருப்பு கணிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் பிரிவு 206 இன் பிரகாரம் அதன் பிரதி கணக்காய்வளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்பு கணிப்பீட்டு அறிக்கை உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். | 2019ம் ஆண்டுக்கான இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் தற்போது பூர்த்தி செய்யப்பட்டதுடன் அதன் பிரதி உடன் தங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் 2012 சனவரி தொடக்கம் 2016 ஏப்ரல் வரை கடமை புரிந்த ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புப் பணத்தை அதற்குப் பொறுப்பான ஊழியர்கள் செலுத்த தவறியதனால் சபை ரூபா 52,673 தொகையை தண்டப்பணமாக செலுத்தியிருந்தது. | உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவை கொடுத்துத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையில் நிதி வசதியின்மையினால் உரிய காலப்பகுததிக்குள் சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டமையினால் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தண்டப்பணம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது என்பதையும் அறியத்தருகின்றேன். |

3.6 பெறுகை

3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆண்டுகளுக்கு பெருகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020ம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ)சந்தைக் கட்டடம் நிர்மாணித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இவ்வேலை 2018 சனவரி 22 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலைகளை கணக்காய்வுத் திகதியான 2019 மே 15 ஆம் திகதி வரை நிறைவு செய்யாதிருந்த போதிலும் ஒப்பந்தகாரர் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எதனையும் எடுத்திருக்காததுடன் ரூபா 537,152 தொகையான தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கட்டுமானப் பணிகளை முடிக்க தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் கட்டடங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | குறித்த வேலைக்கான பிடி காசு இது வரை வழங்கப்படாததனால் பிடிகாசிலிருந்து குறித்த தண்டப்பணத்தினை அறவிடுவதற்கு உள்@ராட்சித் திணைக்களத்திற்கு எம்மால் தெரியப்படுத்தப்பட்டது என்பதை அறியத்தருகின்றேன்.<br><br>குறித்த சந்தைக் கட்டடத்தில் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவு சிட்டையில் தொழில் நுட்ப உத்தியோகத்தரினால் சிபார்சு செய்யப்பட்டதற்கு அமைவாகவே |

| | | |
|---|---|---|
| மேலும் 81.52$m^3$ சீலிங், தரைக்கு பதிக்கப்பட்ட மாபிள்கள், ஸ்கேட்டின் (Skirten) ஆகியன ஒழுங்கான முறையில் பொருத்தப்பட்டிருக்காமலும் மற்றும் சுவர்பூச்சுக்கள் வெடித்தும் காணப்பட்ட போதிலும் இவற்றைக் கருத்தில் கொள்ளாது கொடுப்பனவு வழங்குவதற்கு தொழில் நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்படாது சபையின் தவிசாளரால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. | | தவிசாளரினால் குறித்த ஒப்பந்தகாரர் கேட்டுக்கொண்டதற்கமைய உள்ளூராட்சி ஆணையாளருக்கு சிபார்சுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சபையில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப் பட்டிருந்ததுடன் அவரால் மாதம் தோறும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 02 யூன் 2020 வரை எவ்வித அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே உள்ளகக்கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டும் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த 2020.05.18ந் திகதியே முதல் முதலாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் இடம்பெற்றது அதன் போது உள்ளக கணக்காய்வு தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளது அதற்கமைய இனிவரும் காலங்களில் முறையாக உள்ளக கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

4.2 கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்க இலக்கம் DMA/01-2019 இன் பிரிவு 5.3 இன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் எவ்வித கூட்டங்களும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றுருபத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020ம் ஆண்டு மே 18ந் திகதி மாதத்தில் முதலாம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் இடப் பெற்றுள்ளது தொடர்ச்சியாக ஒவ்வொரு காலண்டும் இக்கூட்டம் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |